**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08012023-6632

Volume: 8

Issue: 1

Month: July

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 18.04.2023

Accepted: 23.05.2023

Published: 01.07.2023

Citation:
Pandiyarasa, P. "The Enlightenment of Tamil Siddhas." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 1, 2023, pp. 92–96.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i1.6632

*Corresponding Author:
pandiyarasa1981@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Enlightenment of Tamil Siddhas

**P. Pandiyarasa**
*Research Scholar, Shaiva Siddhanta Philosophy*
*Philosophy is a Field of Religious and Humanistic Thought*
*Madurai Kamarasar University, Madurai, Tamil Nadu, India*
*http://orcid.org/0009-0002-7804-986X*

## Abstract
This article gives an introduction to Tamil siddhas and their philosophy. It tells the main features of the siddha"s philosophy . then some Siddhar"s song is shown to depict how siddhas mostly against the existed irrational behaviours & social disorder on their time.

**Key Words:** Tamil Siddha.

## References

1. Astanga yoga of Tamil Siddhas

# தமிழ்ச் சித்தர்களின் மெய்யறிவு

*பா. பாண்டியராசா*
முனைவர் பட்ட ஆய்வாளர், சைவ சித்தாந்த தத்துவத்துறை
தத்துவம் சமயங்கள் மற்றும் மனிதநேய சிந்தனைப் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***
*இக்கட்டுரை தமிழ் சித்தர்கள் மற்றும் அவர்களின் தத்துவம் பற்றிய அறிமுகத்தை அளிக்கிறது. இது சித்தரின் தத்துவத்தின் முக்கிய அம்சங்களைக் கூறுகிறது. சில சித்தர்களின் பாடல்கள் சித்தர்கள் தங்கள் காலத்தில் இருந்த பகுத்தறிவற்ற நடத்தைகள் மற்றும் சமூக சீர்கேடுகளுக்கு எதிராக எப்படி சித்தரிக்கிறார்கள் என்பதை சித்தரிக்கிறது.*
***முக்கியச்சொற்கள்:*** *தமிழ் சித்தா*

## முகவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர்களுக்கென சிறப்பிடம் உண்டு. அவர்கள் வாழும் கலையை அறிந்தவர்கள். அவர்கள் விழிப்பு நிலையை உணர்ந்தவர்கள் சித் என்றால் “அறிவு” என்று பொருள். இந்த அறிவை வென்றதன் காரணமாக சித்தர்கள் மனித சமுகத்திற்கு உள்ளத்தால் எழும் எண்ணங்களை பற்றிக் கூறுகிறார்கள். இதன் மூலமாக மனிதனை ஆளாக்குவதும் அழிப்பதும் அவனது எண்ணங்களே. எண்ணம் அழகானால் எல்லாம் அழகாகும் என்பது சான்றோர் வாக்கு. இவ்வாறு சித்தர்கள் தமிழ் இலக்கியத்திற்காகவும், தமிழ் மக்க ளுக்காகவும் மற்றும் இவ்வுலகில் வாழ்கின்ற அனைத்து ஜீவராசிகளுக்கும் ஒரே நிலையில் வாழ்வு அமைய வேண்டும் என்ற சிந்தனை உடையவர்கள் என்பதை அறிய முடிகிறது.

“தமிழ்ச் சித்தர் சிந்தனை மரபு சங்க காலம் தொடங்கி இன்றுவரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. வாழையடி வாழையென வளர்ந்து வரும் இச்சித்தர் சிந்தனை மரபிற்குத் தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. எண்வகை யோகங்கள், எண்வகை சித்தர்கள், மணி, மந்திரம், மருந்து, சோதிடம், வான நூற்கலை, இரசவாதம், வர்மம் தொலைவில் உணர்தல், காலம் கடந்து நிலைபெறுதல், எல்லைகளைக் கடந்து உணர்தல் எனப் பலநிலைகளில் நம் அருமைகளைச் செலுத்தியவர்கள் தமிழ்ச் சித்தர்”[1] என்பதை சான்றுகள் உணர்த்துகின்றன.

சித்தர்கள் பாடல்களில் முக்கிய அம்சம் பகுத்தறிவு ஆகும். பகுத்தறிவின் மூலம் மாற்றத்தை மனிதர்கள் காணமுடியும் என்பதற்கு ஏற்ப மனிதன் அறிந்ததிலிருந்து தன்னைத் தானே உணரவைக்கிறது.

உடற்கூறு மிகவும் அவசியம் உண்மை, உடல் என்று கூறுவர். இரண்டும் ஒன்றே எனலாம். செயல்களில் மெய்யைக் கடைப்பிடித்தால் மட்டுமே உடல் என்ற மெய்யைக்காக்க முடியும். யோக பயிற்சி, சித்த மருத்துவம் சமுக ஒற்றுமை சோதிடம், தன்னையறிதல், தொண்டு, அட்டமகா சித்திகள் ஆகிய பல்வேறு செயல்களை அவர்கள் மேற்கொண்டு உடலையும் உள்ளத்தையும் மேன்மையடைந்து பிற மக்கள் தங்கள் வாழ்வில் தன்னை அறிய வேண்டும், என்ற பின்புலத்தோடு

வாழ்வில் எவ்விதப் பிரச்சினையும் இன்றி வாழ முடியும் என்றும் அதற்கேற்ப பற்றற்ற உண்மையை இவ்வுலகிற்கு எடுத்துக்கூறி மக்களுக்கெல்லாம் வாழ்க்கை வழிகாட்டியாகச் செயல்பட்டவர்கள் என்பது இவர்களின் பாடல்கள் மூலம் அறியமுடிகிறது.

### யோகப் பயிற்சிகள்

யோகப் பயிற்சி என்பது இவ்வுலகில் வாழ்கின்ற அனைத்து ஜீவராசிகளுக்கும் ஒரு பயிற்சி. ஏனெனில் மற்ற விலங்குகள். பறவைகள் உயிரினங்கள் அனைத்தும் யோகப் பயிற்சியை உடலுக்குள் தன்னகத்தே கொண்டு செயல்படுகின்றன.

சித்தர்கள் "குறிப்பாகச் சுவாசத்தை ஒழுங்குபடுத்தும் நுட்பத்தை அறிந்து கொண்டனர். அவர்களைப் பொருத்த வரை, வாசி என்பது சிவா. சிவா என்பது வாசி. ஒருவர் தமது சுவாசம் சுழலும் நுட்பத்தை உணர்ந்து இயக்கக் கற்றுக் கொண்டால், பஞ்சபூதங்களில் அடங்கிய இயற்கைச் சக்திகளையும் இயக்க முடியும் என்ற இரகசியத்தை அறிந்து கொண்டனர்."[2] இவ்வாறு சுவாசத்தை உணரும் போது பல்வேறு மாற்றம் உடலில் ஏற்படும் என்பது மூச்சை உற்று நோக்கும்போது உணரமுடியும். (வாசி) பிராணாயமத்தில் மூச்சைக் கட்டுக்குள் கொண்டு வந்த சித்தர்கள் தங்கள் வாழ்நாளில் உடலில் பல மாற்றத்தை உணர்ந்தனர். "உடல் மற்றும் மனத்தின் கூறுகளைக் கொண்டே அண்டத்தை அறியும் நுட்பத்தையும் கற்றுக்கொண்டனர்"[3] என்பது உடலின் மூலம் மனத்தைக் கவனிக்கும் போது அண்டமும் பிண்டமும் ஒன்று என்று உணர்த்துகிறது. முதலில் சித்தர்கள் அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக் கூறினர். "பிறரின் நலனுக்காக யோக சக்திகளைப் பெறுவது சித்தர்களுக்கென்று அமைந்த முக்கிய கடமையாகும்."[4] இந்த கடமையின் மூலம் மனித உடலும் உள்ளமும் மேன்மையடையும் என்பது உற்றுநோக்குவதன் மூலம் அறியமுடிகிறது.

சித்தர்கள் பிறரின் நலனுக்காக மட்டுமே செயல்பட்டனர். இவர்களின் அறிவு மெய்யறிவாக விளங்கியது. இந்த மெய்யறிவு தன்னை உணர்ந்த அறிவாகக் காட்சியளித்தது. இருப்பினும் தன்னை உணரும்போது வாழ்வில் சித்தர்களின் உடல் தன்னிடம் பேசுமாம். இதைப்போலவே உடலில் காணப்படும் சக்கரங்களை உணரமுடியும். யோகப் பயிற்சியை மேற்கொண்டு தன் உடலையும் காத்து உடலில் உள்ள சக்தி மையங்களை கண்டறிந்து பிறருக்கு வழிகாட்டியாகச் செயல்பட்டனர்.

### சித்தர்களின் பண்புகள்

1. தூய்மையான சிந்தனை உடையவர்கள்.
2. அனைத்து உயிர்களிடத்திலும் மெய்யறிவோடு கூடிய அன்பே உலகம் என்பார்கள்.

இந்த இரண்டையும் மனிதன் கடைப் பிடித்தால் வாழ்வில் நிறைவோடு செயல்பட முடியும். அதுமட்டுமின்றி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அன்பாக வாழ வேண்டும். இதன் மூலம் இவ்வுலகில் நடுநிலைமையடைய முடியும். ஏனெனில் சித்தர்களின் பண்புகள் மிகவும் சிறந்தது எனலாம். இதன் மூலம் பிரபஞ்ச ஆற்றலை எளிமையாகப் பெறமுடியும் என்பது சித்தர்களின் கருத்து அதுமட்டுமின்றி மனிதன் தன்னையடக்க அன்பே சிவம் என்ற மந்திரத்தைக் கடைபிடித்து வாழவேண்டும்.

### மூட நம்பிக்கை

மனிதன் தோன்றிய காலம் முதல் இன்றுவரை மூட நம்பிக்கை வாழ்வில் எதிர்நீச்சல் போட வைக்கிறது.

சித்தர்கள் மெய்யறிவை மக்களிடையே பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு முதல் காரணம் மூட நம்பிக்கைகளை விட்டுவிட வேண்டும் என்ற கொள்கையே. அப்போதுதான் அன்பு என்ற ஒளி புலப்பட்டு சிறந்த சிந்தனை வளரும்.

**பூசைபூசை என்று நீர் பூசைசெய்யும் பேதைகாள்
பூசையுள்ள தன்னிலே பூசைகொண்டது எவ்விடம்
ஆதிபூசை கொண்டதோ அனாதிபூசை கொண்டதோ
ஏதுபூசை கொண்டதோ இன்னதென்று இயம்புமே
புறத்தில் 'பூசை பூசை'' என்று வழிபாடு
செய்யும் பேதையரே !**

பூசை என்னும் வழிபாடு உள்ளத்திலேயே உள்ளது. வெளியில் இருப்பதன்று இப்பூசைகள் ஆதியில் வந்தனவா! அனாதியாக வந்தனவா! எது பூசை என்று விளக்கிக் கூறுவீராக.''[5] எனவே உன் உடலில் உள்ள உள்ளத்தை உற்று நோக்கும் மெய்யறிவு தன்னை உணர்த்தும்.

**சாற்றும் சகுனங்கள் சந்தியா வந்தனம்
போற்றும் அறிவீனமே குதம்பாய்
போற்றும் அறிவீனமே**

குதம்பாய் சகுனம் பார்த்தல், சந்தியாவந்தனம் செய்தல் முதலிய மதிக்கப்பெறும் சடங்குகள் யாவும் அறியாமையின் விளைவுகளேயாகும்''[6] என்றார்கள் சித்தர்கள்.

இவ்வாறு சித்தர்கள் மூடநம்பிக்கைகளை ஒழித்து மெய்யானவற்றை விளக்க வேண்டும் என்கிறார்கள். எனவே மூட நம்பிக்கையை ஒழித்தோம் என்றால் வாழ்வில் வளம் பெற முடியும் என்பது சுத்த தன்மைக்கு ஏற்ப புலப்படுகிறது. அதுமட்டுமின்றி மனித வாழ்வில் புலனடக்கம் மிகவும் அவசியம் என்பதும் விளக்கப்படுகிறது.

**புலன் அடக்கம்**

சித்தர்கள் வாழ்வு புலனடக்கம் சார்ந்ததாகக் காணப்பட்டது. ஏனெனில் வாழ்வில் வெற்றிக்கு முதல் படி புலனடக்கமாகும்.

மனித உடலில் ஐம்புலன்கள் உள்ளன. கண், காது, மூக்கு, வாய், மெய் என்ற ஐம்புலன்களை வைத்துத்தான் இவ்வுடல் இயங்குகிறது. எனவே ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஐம்புலன் அடக்கம் மிகவும் அவசியம்.

இன்று மனிதன் வாழ்வில் பிரச்சினை அதிகமாக உள்ளது. அதற்கு முதல் காரணம் புலனடக்கமின்மையே.

ஏனெனில் சித்தர்கள் வாழ்வையும் மனிதர்கள் வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்த்தால். சித்தர்கள் வாழ்வு அமைதியாக நிறைவாக காணப்படும். ஆனால் மனித வாழ்வு அமைதியற்று, நிறைவற்றுக் காணப்படும் இந்த இரண்டிற்கும் வித்தியாசம் புலனடக்கம் தான் காரணம். எனவே இந்த அகக்கருவிகளை அடக்கினால் உடலில் மெய்யறிவு செயல்பட வாய்ப்புள்ளது என்பதை உணர முடியும்

இந்தப் புலனடக்கம் இல்லா இடத்தில் ஒற்றுமையின்மை ஏற்படும் என்பதற்கு ஏற்ப பாகுபாடு கூடாது என்று உணர்த்துகின்றனர்.

**"பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா
இறைச்சிதோ லெலும்பினு மிலக்கமிட் டிருக்குதோ
பறைச்சிபோகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பருத்துபாரு மும்முளே''[7]**

எனவே சித்தர்கள் மெய்யறிவை உணர்த்தும் விதமாக உடலில் வேறுபாடு கிடையாது என்பதற்கு ஏற்ப வேறுபாடு நீக்கி இருவரையும் பகுத்துப் பார்த்தால் உம் உள்ளத்தில் யாவரும் ஒருவர் என்பது தெரியும். இறைவனின் படைப்பில் யாவரும் சமம் என்றச் சமூகத்தினைக் கூறுகிறார்.''[8] சமூக சிந்தனையை உடையவர்களாகத் திகழ வேண்டும் என்கிறார்கள் சித்தர்கள்.

**முடிவுரை**

நம்மால் இயன்ற உதவிகளை மற்றொருவருக்குச் செய்வதன் மூலம் மெய்யறிவு சிறந்ததாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் உடல் இந்த மெய்யாகிய உடல் மெய்யறிவை அடைய வேண்டுமென்றால்

இவ்வுலகில் வாழ்கின்ற மனிதர்கள் அனைவரும் மெய்யான நம்பிக்கை மற்றும் புலனடக்கத்தையும் கடைபிடிக்க வேண்டும். எல்லையற்ற ஆசையை அறவே ஒழித்தல், பாகுபாட்டை நீக்குதல் இவற்றின் மூலம் அலைகின்ற மனம் ஒரு நிலைபெறும். மெய்யறிவு என்பது தன்னை உணர்தல் என்பதாகும். அதற்கு யோக உடலியக்கப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி தன்னை உணர்ந்தோம் என்றால் தன் நம்பிக்கை வளரும் தன்நம்பிக்கை வளரும்போது உடல் மெய்யறிவை அடைந்துவிடும் என்பது இதன் மூலம் புலப்படுகிறது.

## குறிப்புகள்

1. அரங்க. இராமலிங்கம், சித்தர் வழி, ப.8
2. மேலது ப.43
3. மேலது ப.43
4. மேலது ப.44
5. அ. அறிவொளி, சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், தொகுதி - I, ப. 25.
6. மேலது ப-309
7. வா. சரவணமுத்து, பெரிய ஞானக்கோவை, ப. 9

## துணைநூற் பட்டியல்

1. அறிவொளி, அ. 2019. *சித்தர் பாடல்கள் மூலமும் உரையும்*, தொகுதி-I, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, புதியபதிப்பு.
2. அரங்க. இராமலிங்கம். 2019. *சித்தர்வழி*, சென்னை, வர்த்தமானன் பதிப்பகம்.
3. சரவணமுத்து, வா. 2016. *பெரியஞானக்கோவை*, 3-பாகங்கள், சென்னை, இரத்தின நாயகர் அன் சன்ஸ்.